# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## மூன்றாம் தவணைப்பரீட்சை - 2019

தரம்:09 தமிழ்மொழியும் இலக்கியமும் - I,II நேரம்:2.30 மணித்தியாலம்

சுட்டெண்:……………………………………………………………………………

## பகுதி – I

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. ‘துஷ்யந்தன் சகுந்தலைக்கு கணையாழியை அணிவித்தான்’. இதில் **கணையாழி** என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
    1. அம்புவில் 2. மோதிரம் 3. சங்கிலி 4. ஆடை
02. நகரவாசிகள் நிலாவின் களிப்பை அனுபவிக்க நேரமின்றி உள்ளனர். **களிப்பு** என்பது
    1. கவர்ச்சி 2. சந்தோஷம் 3. உருவம் 4. நிறம்
03. இலங்கைத்தீவு இரவில் பொற்குன்று போல ஒளிரும் இங்குள்ள **குன்று** என்பதன் எதிர்ச்சொல்
    1. மலை 2. வரை 3. குழி 4.பள்ளம்
04. “அல்லவை தேய அறம் பெருகும்…”என்பதில் **அறம்** என்பதன் எதிர்ச்சொல்
    1. மறம் 2. புறம் 3. செல்வம் 4. நன்மை
05. “இவளை நம் மனைக்கிழத்தியாக ஏற்பீராக” **கிழத்தி** என்பதன் எதிர்ப்பால்
    1. நண்பன் 2. கணவன் 3. கிழவன் 4. தபுதாரன்
06. அப்பு, புனல், தீர்த்தம் எனப் பல பொருள் குறிக்கும் ஒரு சொல்
    1. மலை 2. நீர் 3. அருள் 4. அடவி
07. CCTV (சி.சி.ரி.வி) என்ற கலைச் சொல்லின் தமிழ் வடிவம்
    1. முகநூல் 2. மறைகாணி 3. எழுத்துணரி 4. கீச்சகம்
08. ஆக்கப் பெயர் அல்லாதது
    1. வானொலி 2. பயிற்சி 3. நீட்சி 4. காட்சி
09. மாடுகள் பட்டிக்குத் திரும்பி வந்தது. இவ்வாக்கியத்திலுள்ள வழு
    1. திணைவழு 2. எண்வழு 3. காலவழு 4. பால்வழு
10. முயற்சி திருவினையாக்கும்……. கடுமையாக உழைத்து முன்னேறுங்கள். இடைவெளிக்கு பொருத்தமான இணைப்பிடைச் சொல்
    1. எனினும் 2. ஆனால் 3. இருப்பினும் 4. அதனால்
11. தென்னை ஓலை என்பது போல கமுகு
    1. தாள் 2. மடல் 3. இலை 4. கூந்தல்
12. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கும் விழா
    1. பொன்விழா 2. அமுதவிழா 3. வைரவிழா 4. பவளவிழா
13. கண் மலர்தல் என்ற மரபுத்தொடரின் கருத்து
    1. மறைதல் 2. விழித்தல் 3. பிற்போடல் 4. விரிதல்
14. பறவைகள் வான்வெளியில் பறந்தன. இவ் வாக்கியம்
    1. கலப்புவாக்கியம் 2. கூட்டுவாக்கியம் 3. தனிவாக்கியம் 4. தொடர்வாக்கியம்

15. 'தாய் தன் மகவை கட்டியணைத்தாள்'. இதில் இடம்பெறும் வினையடி?
1. கட்டி 2. கட்டியணை 3. அணை 4. கட்டு

16. கண் வேற்றுமை என்று பெயர்பெறும் வேற்றுமை
1. 6ஆம் வேற்றுமை 3. 7ஆம் வேற்றுமை
2. 5ஆம் வேற்றுமை 4. 4ஆம் வேற்றுமை

17. குதிரை காற்றிலும் வேகமாய்ப் பாய்ந்து ஓடியது. இதில் கையாளப்பட்டுள்ள அணி.
1. தன்மை நவிற்சி 2. உயர்வு நவிற்சி
3. தற்குறிப்பேற்றஅணி 4. உவமைஅணி

18. உயிர்முன் உயிர் புணர்தலுக்கு உதாரணம்
1. கிளி+கூடு 2. மா+கனி 3. பலா+இலை 4. புளி+காய்

19. பின்வருவனவற்றுள் கூட்டுவினை அல்லாதது
1. உத்தரவிடு 2. தட்டிக்கேள் 3. பாடுங்கள் 4. சரிபார்

20. கடல் + அலை என்பதனை கடலலை எனப் புணர்த்தும் போது இடம்பெறும் புணர்ச்சி
1. தோன்றல் 2. இயல்பு 3. திரிதல் 4. கெடுதல்

21. பச்சைக்கிளி இனிமையான பழம் உண்டது. இவ்வாக்கியத்தில் எழுவாய் அடைமொழி
1. கிளி 2. பழம் 3. இனிமை 4. பச்சை

**புள்ளிக் கோடிட்ட இடத்தில் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

22. குற்றவாளியை கண்ட இடத்தில் கைது செய்யுமாறு நீதிபதியால் .............. பிறப்பிக்கப்பட்டது.
1. அழைப்பாணை 2. பிடியாணை 3. உத்தரவு 4. கட்டளை

23. சீதாவும் மாலாவும் கல்லூரிக்குச்...........
1. சென்றது 2. சென்றனர் 3. சென்றோம் 4. சென்றீர்

24. பறவைகள் கூட்டம் கூட்டமாய்ப்.................
1. பறந்தார் 2. பறந்தனர் 3. பறந்தது 4. பறந்தன

25. மானுக்கு கலை போல புலிக்கு
1. போத்து 2. களிறு 3. கடுவன் 4. குட்டி

26. 'சூரியனைக் கண்ட பனிபோல' என்ற உவமைத் தொடரின் கருத்து ____________
1. தெட்டத்தெளிவு 2. உடன்மறைவு
3. சூரியனின் சூடு 4. பனியின் உறைநிலை

27. பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழையற்ற சொல்
1. கலாச்சாரம் 2. தேனீர் 3. செயப்படுபொருள் 4. விற்ப்பனை

28. மொழிக்கு முதலில் மட்டும் வரும் வினாவெழுத்து
1. ஏ,ஓ 2. எ,யா 3. அ,ஒ 4. ஆ,ஓ

29. 'இரக்கப் போனாலும் சிறக்கப் போ' என்ற பழமொழியின் கருத்து
1. விடா முயற்சி பயன் தரும் 2. வறுமையில் செம்மை
3. கஸ்டத்தில் கடன் கேள் 4. இரத்த உறவின் வலிமை

30. பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்திப் பந்தியாக்குக
அ) அப்படி தண்டனை அளித்துக் கொள்வதில் சிறு சந்தோஷம்
ஆ) வருத்தப்படுவதன் மூலம் நமக்கு நாமே தண்டனை அளித்துக் கொள்கின்றோம்
இ) இவை இரண்டும் வழி தெரியாதவர் நடக்கும் தடுமாற்றப் பாதைகளே
ஈ) இதன் மூலம் பிறர் அனுதாபங்களைப் பெற முயல்கின்றோம்
1. ஆ,அ,ஈ,இ 2. இ,அ,ஆ,ஈ 3. ஆ,ஈ,அ,இ 4. அ,இ,ஈ,ஆ

**(30 புள்ளிகள்)**

kalvi.lk

## பகுதி II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 150 சொற்களில் அமையுமாறு கட்டுரை வரைக.**

1. மரம் வளர்த்து வரம் பெறுவோம்
2. நீர்ப் பாதுகாப்பின் முக்கியத்துவம்
3. கிராம வாழ்வும் நகர வாழ்வும்
4. நான் சென்ற மலை நாட்டுப் பிரயாணம்

**(18 புள்ளிகள்)**

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 75 சொற்களில் அமையுமாறு எழுதுக.**

1. வீதியிலுள்ள குப்பைகளை அகற்றுமாறு பிரதேச செயலருக்கு ஒரு கடிதம்
2. புதிதாக வெளிவரவுள்ள இலக்கிய இதழ் தொடர்பான விளம்பரம்.

**(12 புள்ளிகள்)**

**03. பின்வரும் கூற்றுக்கள் யாரால் யாருக்கு கூறப்பட்டன.**

அ. "முதற்கண் மற்றவர்கள் விடயத்தில் தலையிடாமல் இருப்பதற்குக் கற்றுக் கொள்"

ஆ. "வாழ்க்கையில் உன் நற்பண்புகளுக்காக வெகுமதி கிடைக்கும் என்பதனை நான் நம்புகிறேன்"

இ. "நான் ரிக்சோக்காரன் உழைச்சுப் பிழைக்கிறவன் பிச்சைக் காரனில்லை"

ஈ. "இல்லை மகனே! உன்னால் அதை வெல்லமுடியாது"

உ. "அரசே நீங்கள் இப்படிக் கூறுவது தர்மமாகுமா?
பெண்பழி பொல்லாதது அரசே"

**(10 புள்ளிகள்)**

**04. பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

**"அணி கொண்ட குரங்கினங்கள்**
**அலை கடலுக் கப்பாலை**
**மண லொன்று காணாமல்**
**வரை யெடுத்து மயங்கினவே"**

1. குரங்குகள் எதனைப் பெயர்த்து வந்து கடலில் போட்டு மயங்கின?
2. குரங்குகள் எதனை காணவில்லை என கூறப்படுகிறது?
3. இப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள அணி யாது?
4. வரை என்பத்ன் பொருள் யாது?
5. 'அலைகடலுக்கப்பாலை' இத்தொடரை சந்தி பிரித்து எழுதுக.

**(10 புள்ளிகள்)**

**05. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. வாழ்க்கையின் வெற்றிப்பட்டியலில் இடம் பெற நாம் என்ன செய்ய வேண்டும்?
2. "கனியிருப்பக் காய் கவர்தல்" என்ற உவமைத் தொடரின் சிறப்பினை எழுதுக.
3. எடிசன் தான் அடைந்த தோல்விகள் ஒவ்வொன்றிலிருந்தும் எதனைக் கற்றுக் கொண்டார்?
4. 'எல்லோர்க்கும் ஒவ்வொன்(று) எளிது' என்ற பாடலடியின் பொருள் யாது?
5. துர்வாச முனிவர் சகுந்தலைக்கு இட்ட சாபம் யாது? சாப விமோசனத்திற்கு கூறியது யாது?

**(10 புள்ளிகள்)**

kalvi.lk

06. அ. பின்வரும் தொடர்களின் பொருள் விளங்க ஒவ்வொரு வாக்கியம் அமைக்குக.

1. பென்னம் பெரிய்
2. சுடச்சுட
3. கீரியும் பாம்பும் போல
4. அக்கம் பக்கம்
5. அள்ளியிறைத்தல்

(5 புள்ளிகள்)

ஆ. வழு நீக்கி எழுதுக.

கீள்மட்ட எண்னங்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் அதில் ஆள்ந்து போகிறார்கள். மாராக மேம்பட்ட எண்னங்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் வாள்க்கையில் வெற்றிப் பட்டியலில் இடம் பெறுகின்றனர்.

(5 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



தரம் 01 - 10
3ம் தவணை
REVISION | PAPER DISCUSSION
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..
கட்டண விபரங்கள்
ஆரம்பம் - 01.12.2024
மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.
JOIN NOW
தமிழ் Medium
தரம் 01-02 2000/=
தரம் 03-05 2500/=
தரம் 06-10 3000/=
English Medium
தரம் 06-07 3500/=
Education கல்வி අධ්‍යාපන
KALVI.LK
WHATSAPP
075 287 1457